# பாராட்டு யாருக்கு?

**எ**ன்னை மிகவும் பாராட்டினார்கள்! அந்தப் பாராட்டுதலுக்கு நான் அருகதையுடையவள் அல்ல! நான் அய்யா அவர்களின் கட்டளைக்கிணங்கவே சாதாரண முறையில் தொண்டு செய்கிறேனே ஒழிய வேறில்லை.

மேலும், பலர் சட்டம் எரித்து மாதக்கணக்கில், வருடக்கணக்கில் சிறைப்பட்டு வேதனைக்குள்ளாயினர். மூவாயிரம் பேருக்கு மேல் விடுதலையானாலும் இன்றும் நூற்றுக்கணக்கானோர் சிறையில் பல துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்குத்தான் உண்மையிலேயே பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். சாதி ஒழிப்புக்காக ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவித்து சிறை மீண்ட பெரியார் அவர்களைப் பாராட்டுவதோடு நின்றுவிட்டால் போதாது. அவர் வழிநின்று நாட்டின் விடுதலை பெற மிகவும் பாடுபட வேண்டும். அனைவரும் முன்வந்து உழைத்து வெற்றி பெறுவோம்.

*(ஆறு மாதம் சிறை சென்று மீண்ட தந்தை பெரியார் அவர்களுக்கும், 'விடுதலை'யில் வெளியான ஒரு கட்டுரை சம்பந்தமாக ஒரு மாதம் சிறை சென்று மீண்ட அன்னை மணியம்மையார் அவர்களுக்கும் பாராட்டுக் கூட்டம் சிவகங்கையில் நடந்தது. பாராட்டிற்கு நன்றி தெரிவித்து மணியம்மையார் ஆற்றிய உரை)*

*- **"விடுதலை"** (8.10.1958)*

*(தமிழ்நாடெங்கும் இதுபோன்ற பாராட்டுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. குடியேற்றத்தில் நடந்த கூட்டத்தில் அன்னை மணியம்மைக்குக் கறுப்புச் சேலை அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்டது.)*